# மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை – வட மத்திய மாகாணம் – அநுராதபுரம்

இந்த அதிகாரசபையின் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்காக தமது விண்ணப்பங்களை 2026.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்புமாறு அறியத்தருகிறோம்.

**01. பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி)**
**02. தலைமை பொறியியலாளர் (நடவடிக்கை)**
**03. நிறைவேற்று பொறியியலாளர்**
**04. பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் நிர்மாணம்)**
**05. பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வரவு, செலவுத் திட்டம்)**
**06. பொறியியலாளர் (பொருட்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு)**
**07. தொழில்துறை அதிகாரி**

## 01. பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் மனித வள அபிவிருத்தி)

**சம்பள அளவு -** (HM 1-1 2025) 140,640-15×4,100-202,140

**வயது வரம்பு -** ஆட்சேர்ப்பு திகதிக்கு 55 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவை, அரச சார்பு நிறுவனம் ஒன்றில் (கூட்டுத்தாபனம், சபை சட்டரீதியான சபை) சேவையில் ஈடுபடுவர்கள் தொடர்பில் உச்ச வயது எல்லை பொருந்தாது.

**குறைந்தபட்ச தகைமை மற்றும் சேவை தேவை**

01. இலங்கையில் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கணக்காளர்களின் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சிய முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சன்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கத்தின் உறுப்பினராக இருத்தல்.

அத்துடன்

08 ஆண்டு காலம் கணக்காளர்/ உள்ளக கணக்காய்வாளராக அனுபவம் அதில் 06 ஆண்டுகள் தகைமையை பெற்ற பின்னராக இருத்தல் வேண்டும், அத்துடன் 06 ஆண்டுகள் அனுபவம் உள்ள இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வர்த்தக முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்று இருத்தல் வேண்டும்.

02. மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்புடைய தரத்தின் 05 ஆண்டுகள் சேவையுடன் கணக்காளர் அல்லது உள்ள கணக்காளர் 2–1 தர அதிகாரியாக இருத்தல்.

அத்துடன்

வர்த்தக முகாமைத்துவ அல்லது மனித வள முகாமைத்துவம் தொடர்பில் இலங்கையில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு பட்டம்.

## 02. தலைமை பொறியியலாளர்

**ஆட்சேர்ப்பு தரம் -** 02-I தரம்

**சம்பள அளவு -** (MM 1-3 2025) 96,650-10×2,480-15×3,450-173,200

**வயது வரம்பு -** ஆட்சேர்ப்பு திகதிக்கு 55 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவை, அரச சார்பு நிறுவனம் ஒன்றில் (கூட்டுத்தாபனம், சபை சட்டரீதியான சபை) சேவையில் ஈடுபடுவர்கள் தொடர்பில் உச்ச வயது எல்லை பொருந்தாது.

**குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் சேவை தேவைகள்**

(i) (அ) இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தவொரு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட பி.எஸ்.சி. பட்டம் அல்லது அதற்கு நிகரான பொறியியல் தகைமையை பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை பொறியியலாளரின் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சிவில் பொறியியல் நிறுவனத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது பாகத்தில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை பொறியியலாளரின் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சிவில் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவம்.

அல்லது

(ii) மேலுள்ள நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்படும் வேறு பொறியியலாளரின் நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

அத்துடன்

06 ஆண்டுகள் பொறியியலாளர் ஒருவராக செயற்பட்டிருத்தல் வேண்டும். அதில் 02 ஆண்டுகள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் II ஆவது தரம் அல்லது பாலம்/ நெடுஞ்சாலை தொடர்புபட்ட வேறு அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் நிறுவனம் ஒன்றில் (II ஆவது தரத்தில் இருத்தல் வேண்டும்)

## 03. நிறைவேற்று பொறியியலாளர்
## 04. பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் நிர்மாணம்)
## 05. பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வரவு செலவுத் திட்டம்)
## 06. பொறியியலாளர் (பொருட்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு)

**ஆட்சேர்ப்பு தரம் -** II தரம்

**சம்பள அளவு -** (MM 1-3 2025) 96,650-10×2,480-15×3,450-173,200

**வயது வரம்பு -** ஆட்சேர்ப்பு திகதிக்கு 45 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவை, அரச சார்பு நிறுவனம் ஒன்றில் (கூட்டுத்தாபனம், சபை சட்டரீதியான சபை) சேவையில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் உச்ச வயது எல்லை பொருந்தாது.

**குறைந்தபட்ச தகைமை மற்றும் தேவைகள் - A வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

01. சிவில் பொறியியல் பாடப் பரப்பின் பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத்தைப் பெற்ற பின்னர் சிவில் பொறியயில் பாடப் பரப்பில் பொருட்கள்/ உற்பத்தி/ நிர்மாண பணிகள் தொடர்பில் குறைந்தது 01 ஆண்டு அனுபவம் இருத்தல்.

02. இலங்கை பொறியியல் நிறுவனத்தின் சிவில் பொறியியல் பாடப் பரப்புக்கு தொடர்பில் இணை அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையை பெற்ற பின்னர் சிவில் பொறியியல் பாடப் பரப்பில் பொருட்கள்/ உற்பத்தி/ நிர்மாண பணிகள் தொடர்பில் குறைந்தது 01 ஆண்டு அனுபவம் இருத்தல்.

03. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட சிவில் பொறியியல் பாடப் பரப்புக்கு தொடர்புடைய தேசிய தொழில் தகைமை (NVQ) ஏழாவது (07) தரத்திற்கு குறையாத தரம் ஒன்றில் தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து குறைந்தது குறித்த துறையில் ஓர் (01) ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படும் சிவில் பொறியியல் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அரச தொழில்நுட்ப அதிகாரி பரீட்சையின் (GTO) III பாகத்தில் சித்தி பெற்ற, வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (வ.ம.மா.) விடயப் பரப்பின் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்.

அத்துடன்

தகைமையை பெற்ற பின்னர் சிவில் பொறியியல் பாடப் பரப்பில் பொருட்கள்/ உற்பத்தி/ நிர்மாண பணிகள் தொடர்பில் குறைந்தது 01 ஆண்டு அனுபவம் இருத்தல்.

**B உள்ளக விண்ணப்பதாரர்**

மேலுள்ள A இல் தகைமைகளுக்கு மேலதிகமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது நிரந்தர சேவையில் ஈடுபட்டிருத்தல் மற்றும் சிறந்த பண்புடையவர்கள் மற்றும் செயல்திறனுடன் இருத்தல் வேண்டும்.

## 07. தொழில்துறை அதிகாரி

**ஆட்சேர்ப்பு தரம் -** 03 தரம்

**சம்பள அளவு -** (MA 2-2 2025) 50,540-10×540-7×630-4×1,080-20×1,280-90,270

**வயது வரம்பு -** ஆட்சேர்ப்பு திகதிக்கு 45 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவை, அரச சார்பு நிறுவனம் ஒன்றில் (கூட்டுத்தாபனம், சபை சட்டரீதியான சபை) சேவையில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் உச்ச வயது எல்லை பொருந்தாது.

**குறைந்தபட்ச தகைமை மற்றும் சேவை தேவை –**

பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படும் தொழில்நுட்பம் (சிவில்) தொடர்பில் தேசிய சான்றிதழுக்கான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**ஏனைய நிபந்தனைகள்**

* விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதியாகும்போது குறித்த தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
* அரச சேவை அரச சார்பு நிறுவனங்களில் சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்களினால் தமது சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பத்தை தயாரித்து அனுப்புதல் வேண்டும் என்பதோடு, தன்னைப் பற்றிய விபரத்தைப் பெற முடியுமான இருவரின் பெயரை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்களுக்கு விசேட தகைமை மற்றும்/ அல்லது அனுபவம் இருந்தால் அவற்றை கருத்தில் கொண்டு உயர் தரம் ஒன்றில் அல்லது ஒரு தரத்தில் சம்பள அளவின் பொருத்தமான சம்பளப் படியில் வைக்கப்படும்.
* தெளிவற்ற முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
* இந்தப் பதவிக்காக அதிகாரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

**முகவரி –**

**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**எச்.பி. சேமசிங்க மாவத்தை,**
**அநுராதபுரம்,**
**வட மத்திய மாகாணம்.**